# 13-04-2024 செய்தி

## ஓக் மரங்கள் வளர்த்த பசுமை புரட்சியாளர் முராரி லால் மறைவு

- வனப் பாதுகாப்பை முன்னிறுத்தி பழங்குடியின மக்கள் மரங்களை கட்டித் தழுவி வெட்ட விடாமல் போராடிய "சிப்கோ இயக்கம்" இமயமலை அடிவாரத்தில் 1970களில் தொடங்கப்பட்டது.

- காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து மரங்களை பாதுகாத்துப் பராமரித்தல் போன்ற நோக்கங்களுடன் இந்த இயக்கத்தை நிறுவியவர் சுந்தர்லால் பகுகுணா.

- இந்த சிப்கோ போராட்டத்தின் தாய் இயக்கமாகக் கருதப்படுவது "தஷோலி கிராம சுயாட்சி இயக்கமாகும் ".

- 1964-ம் ஆண்டு உத்தராகண்ட் மாநிலத்தின் (அன்று உத்தர பிரதேசம்) கோபேஸ்வரத்தில் தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தின் தலைவராகச் செயல்பட்டவர் முராரி லால் பின்னாளில் சிப்கோ இயக்கத்திலும் தன்னை இணைத்துக் கொண்டார்.

## மாணவிகளுக்கு மாதவிடாய் விடுமுறை பஞ்சாப் பல்கலை.யில் அறிமுகம்

- மாணவிகளுக்கு மாதவிடாய் காலத்தில் விடுமுறை அளிக்கும் நடமுறையை வரும் கல்வியாண்டு முதல் அளிக்க பஞ்சாப் பல்கலைகழகம் முடிவு செய்துள்ளது.

- பஞ்சாப் பல்கலையில், படிக்கும் மாணவிகளின் உடல் நலனை கருதி, மாதந்தோறும் மாதவிடாய் காலங்களில் 1 நாள் விடுமுறை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

- இதன்படி, மாதத்தில் 15 நாட்கள் வகுப்பில் பங்கேற்கும் மாணவிகளுக்கு, இந்த விடுமுறை அளிக்கப்படும்.

- 2023ல், நம் நாட்டிலேயே முறையாக மாணவியருக்கான மாதவிடாய் விடுமுறையை, கேரளாவின் கொச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலை அளித்தது.

- இதைத் தொடர்ந்து கேரள அரசின் கீழ் இயங்கும் அனைத்து பல்கலைக்கும் கடந்த ஆண்டே நடைமுறைப்படுத்தியது.

- இதேபோல் தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் உள்ள நால்சார் சட்ட பல்கலை, வடகிழக்கு மாநிலமான அசாமின் குல்ஹாத்தி பல்கலை, தேஜ்பூர் பல்கலை ஆகியவற்றிலும் மாணவிகளுக்கு மாதவிடாய் விடுமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.